**செய்தி வெளியீடு எண்: 05/06/2021** **30.06.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 21.06.2021 முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மீண்டும் தொடங்கியது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காகவும் பயணிகளின் 100% பாதுகாப்பான பயணத்திற்காகவும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் அனைத்து பயணிகள் மற்றும் பணியாளர்களுக்கு உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படுகிறது.

கொரோனா அறிகுறியற்ற பயணிகள் மட்டுமே மெட்ரோ இரயில் நிலையங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள். பயணிகளில் எவருக்கேனும் கொரோனா அறிகுறி அல்லது அதிக உடல் வெப்பநிலை இருந்தால் அவர்கள் மெட்ரோ இரயில் சேவையை பயன்படுத்த அனுமதி மறுக்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

அனைத்து மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களிலும் பயணிகள் தங்களது கைகளை சுத்தப்படுத்திக்கொள்ள காலால் இயக்கப்படும் தானியங்கி கை சுத்திகரிப்பான் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

வழக்கம் போல பயணிகளும், பயணிகள் கொண்டுவரும் பொருட்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

மத்திய பொதுப்பணித்துறை (CPWD) வழிகாட்டுதலின் படி, கொரோனா பரவலை தவிர்க்கும் விதத்தில் அனைத்து சுரங்கவழிப்பாதை இரயில் நிலையங்களிலும் $24^0$C முதல் $30^0$C அளவில் தட்பவெட்ப சூழலும் 40 முதல் 70 சதவீதம் வரையிலான ஈரப்பதம் மட்டுமே பராமரிக்கப்படுகிறது. இரயில்கள் மற்றும் இரயில் நிலையங்களின் உட்புறம் எப்பொழுதும் சுகாதாரமான காற்றை பராமரிக்கவும் தினந்தோறும் தேவையான அளவு தூய்மையான காற்று சுழற்சிமுறையில் செலுத்தப்படுகிறது. காற்று இரண்டு படிநிலைகளில் சுத்திகரிக்கப்பட்டு உட்செலுத்தப்படுகிறது. காற்று

வடிப்பான்கள், குளிர்சாதனப் பெட்டி சுருள்கள், காற்று சீர்படுத்தும் கருவிகள் மற்றும் குளிர்சாதன வலைகளும் காற்று செல்லும் பாதைகளிலும் Ultra Violet கதிர்கள் செலுத்தப்பட்டு நுண்ணிய கிருமிகள் கூட அழிக்கப்பட்டு தூய்மை உறுதி செய்யப்படுகிறது.

**மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் அதன் வளாகங்களில் உள்ள பல்வேறு பகுதிகள் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது:**

மெட்ரோ இரயில் நிலையங்களில் மக்கள் உபயோகிக்கும் அனைத்து பகுதிகள், மின்தூக்கி பொத்தான்கள், கைப்பிடிகள், நகரும் படிக்கட்டுகள் போன்ற அனைத்து இடங்களும் அடிக்கடி கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகின்றன.

மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பொதுக் கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்வதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

பயணிகளின் பாதுகாப்பிற்காக அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது.

**கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

பயணிகளின் விழிப்புணர்வு மற்றும் தனிமனித இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிப்பதற்காக மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் அனைத்து பயணிகளும் நகரும் மற்றும் காத்திருக்கும் பகுதிகளில் தனிமனித இடைவெளி குறித்த ஸ்டிக்கர்கள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் இந்த அடையாளங்களை பின்பற்ற வேண்டும்.

அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பான வழிகாட்டுதல்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகளின் விழிப்புணர்வுக்காக தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிவது மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்து பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன.

அனைத்து பயணிகளும் முகக்கவசத்தை சரியாக அணிந்துள்ளனரா என்பதை கண்காணிக்க குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது.

21.06.2021 முதல் 29.06.2021 வரை முகக்கவசத்தை அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 27 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.5400 வசூலிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த "X" குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்தக் குறியீடுகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியைக் கண்காணிப்பதற்காகத் தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கண்காணிப்புக் கேமரா மூலம் பயணிகளின் தனிமனித இடைவெளி கண்காணிக்கப்படுகிறது.

**மக்கள் தொடுதலின்றி பயணம் செய்ய, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்:**

- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் 20% கட்டணத் தள்ளுபடியுடன் தொடர்பு இல்லாத கியூஆர் குறியீடு பயணச்சீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தொடர்பு இல்லாத பயண அட்டைகள் 20% கட்டண தள்ளுபடியுடன் ஊக்குவிக்கப்படுகிறது.
- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மின்தூக்கியைத் தொடுதலின்றி காலால் இயக்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளது.
- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் கழிப்பறைகளில் உள்ள தண்ணீர்க் குழாய்களை இயக்க கைகளைப் பயன்படுத்தாமல் காலால் இயக்கும் பொத்தான்கள் பொருத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**